REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55030

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: பங்குனி 8உ வியாழன் (21—3—57) ★ ★ வெளியூர்: பங்குனி 9உ வெள்ளி (22—3—57) [இதழ் 242

தாராளமே தாராளம்!

★

புதுடில்லி, மார்ச் 20—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், சென்னை மாநிலத்தில் எத்தனை மின்சார உற்பத்தித் திட்டங்களை உருவாக்க முடியுமோ அவ்வளவு உருவாக்கப் போகிறோம்" என்று, மத்திய உதவி மந்திரி ஒருவர் கூறியிருக்கிறார்.

தோழர் எஸ். வி. இராமசாமி அவர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது மந்திரி இதுபோலக் கூறியிருக்கிறார்.

'திராவிடத்தைக் கவனித்து காத்துவருவோமாக'

'மொத்தக் கணக்கைப் பார்த்து மக்கள் சந்தோஷப்படமாட்டார்கள்'

'ராஜ்ய சர்க்காருடைய சுதந்திரங்களும் செல்வாக்கும் குறைந்துபோக விடலாகாது'

'திராவிடத்தின் முன்னேற்றத்தை முக்கியமாகக் கவனிக்கும் கூட்டம் ஒன்று இருப்பது அவசியம்'

'கல்கி' இதழ் நியாயம் கோருகிறது

"பிரதேசங்களின் முன்னேற்றத்தைக் கவனிப்பது மத்திய அரசாங்கத்துக்குப் பகைமையாகாது. பாரத சர்க்காருக்குப் பிரதேச ராஜ்யங்கள், பலமும் அதிகாரமும் தரவேண்டும்.

"இது நியாயமேயொழிய, பாரத சர்க்காரிடமிருந்து ராஜ்யங்கள் பலமும் அதிகாரமும் பெறுவது முறையல்ல. 'இந்திய யூனியன்' என்பதற்குப் பொருள் பல பிரதேசங்கள் தங்களுக்கு இயற்கையில் இருக்கும் அதிகாரத்தில் ஒரு பங்கை மத்திய சர்க்காருக்குத் தருவதாகும். 'மாகாணம்' என்பது போய், 'ராஜ்யம்' என்று பெயர் வைத்திருக்கிறோம். யூனியன் தட்டில் அதிகாரம் அதிகமாகி, ராஜ்ய சர்க்கார் தட்டில் நிறை குறைந்து போகலாகாது."

"இந்தியா ஒரு ஆட்சியாயினும் பாரத நாட்டின் மக்கட்தொகை மிகப் பெரியது. எல்லாப் பிரதேசங்களிலுள்ள மக்களும் முன்னேற்றம் அடையவேண்டும். ஒற்றுமை உணர்ச்சி இருப்பினும் மிகப் பெரிய ஜன சமூகத்தைப் பரிபாலிக்கும்போது எல்லாப் பிரதேசங்களையும் அவற்றின் முன்னேற்றத்தையும் கவனிக்க வேண்டும். மொத்தக் கணக்கைப் பார்த்து மக்கள் சந்தோஷப் படமாட்டார்கள்.

"நம்முடைய தென்னாட்டின் முன்னேற்றத்தைப் பாரத சர்க்கார் கவனித்து வருகிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆயினும், சிலர் ஐயப்படுகிறார்கள் என்பதும் உண்மை. காவலிருந்தால் தான் எந்தக் காரியமும் சரியாக நடைபெறும். ராஜ்ய சர்க்காருடைய சுதந்திரங்களும் செல்வாக்கும் குறைந்துபோக விடலாகாது.

"பாரத சர்க்காருக்கே எல்லாப் பலமும் அதிகாரமும் இரத்த ஓட்டமும் சென்றுவிடுவது பிரதேச முன்னேற்றத்துக்குப் பாதகம் விளைவிக்கும்.

"திராவிடம் என்பது தென்னாட்டின் பெயர். அதன் முன்னேற்றத்தை முக்கியமாக கவனிக்கும் கூட்டம் ஒன்று இருப்பது அவசியம். திராவிடம் என்றால் உடனே ஜாதி பேதம், பிராமணத் துவேஷம் என்று எண்ணத் தோன்றும்; இதற்குக் காரணம், நம்முடைய 'பெரியார்'ரின் பேச்சும் திருவிளையாடல்களும்தான். இதை மூட்டைகட்டிக் கடலில் போட்டுவிட்டு, திராவிட நாட்டின் முன்னேற்றத்தை கவனிப்போமாக! 'ஜனகண' என்று நாம் பாடும் நாட்டு வணக்கப் பாட்டில் சொல்லப்பட்ட 'திராவிட'த்தைக் கவனித்துக்காத்து வருவோமாக! இதை சாதித் துவேஷக் கூட்டத்தாருக்கு மட்டும் மான்யமாக விட்டுவிடாமல், எல்லோருமே அக்கரை செலுத்தி ஒன்றுபட்டு வேலை செய்ய வேண்டும்."

3,28,127 !

சென்னை மாநிலத்தில் செல்லாத வாக்குகள் !

சென்னை, மார்ச் 20—

சென்னை மாநிலத்தில் பதிவான மொத்த வாக்குகள் 1,14,28,710; இந்த வாக்குகளில் செல்லுபடியாகாதவை மட்டும் 3,28,127 என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. பதிவான மொத்த வாக்குகளில் இது 20.9 சதவிகிதமாகும்.

கழக அபேட்சகர் நியமனப் பத்திரம் சட்டவிரோதமாக நிராகரிப்பு

மாயூரத்தில் வழக்காட முயற்சி

மாயூரம், மார்ச் 20—

மாயூரம் சட்டசபைத் தொகுதிக்கு தி. மு. கழக அபேட்சகராக நியமனப் பத்திரம் தாக்கல் செய்திருந்த தோழர் குடவாசல் ச. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தமது நியமனப் பத்திரம் அதிகாரியின் தவறான போக்கில் சட்டத்திற்கு விரோதமாக நிராகரிக்கப்பட்டது என்றும் எனவே, இப்போது அந்தத் தொகுதியில் நடைபெற்றத் தேர்தல் செல்லாது என்றும் தேர்தல் கமிஷனிடம் வழக்குப் பதிவு செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். (ந. நி.)

சட்ட சபையில் பெண்கள் பங்கு !

சென்னை, மார்ச் 20—

புதிய சட்டசபையில் 12 பெண் உறுப்பினர்கள் இடம் பெறுவர். கடந்த 5 ஆண்டுகளில் ஒரே ஒரு பெண் உறுப்பினர் மட்டுமே இடம் பெற்றிருந்தார்.

இந்தப் பெண் உறுப்பினர்களில், இருவர் மட்டுமே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்; அதில் தோழியர் சத்தியவாணிமுத்து தி. மு. கழகத்தின் அபேட்சகராகத் தேர்தலில் வெற்றிபெற்றார்.

தொகுதிகளும் போட்டியிட்டோரும்

சென்னை மாநிலத்திற்கு உள்ள மொத்தத் தொகுதிகள் 167 ஆகும்.

சென்னை சட்ட சபைக்கு மொத்தம் 205 உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கத் தேர்தல் நடைபெற்றது.

மூன்று இடங்களில் போட்டியின்றி காங்கிரஸ் அபேட்சகர்கள் தேர்தெடுக்கப்பட்டனர்; பாக்கியுள்ள 102 இடங்களில் 787 பேர் போட்டியிட்டனர்.

காங்கிரஸ் 201; தி. மு. கழகம் 117; கா. சீ. க. 50; கம்யூனிஸ்டு 55; பி. சோ. 22; சோஷியலிஸ்டு 8; முன்னேற்றக் கட்சி 2; சுயேச்சைகள் 337—என்ற அளவில் அபேட்சகர்கள் போட்டியிட்டனர்.

இப்போது, எல்லா இடங்களிலும் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன.

புதிய சட்டசபையில் காங்கிரஸ் 151 இடங்களையும், தி. மு. கழகம் 15 இடங்களையும், கா. சீ. க. 14 இடங்களையும், கம்யூனிஸ்டு 4 இடங்களையும், மக்கள் சோஷிலிஸ்டுக் கட்சி 2 இடங்களையும் சோஷியலிஸ்டுகள் 2 இடங்களையும், பார்வார்டுபிளாக் 2 இடங்களையும், சுயேச்சைகள் 15 இடங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

'தி. மு. க.-வினரைப் பொறுத்தமட்டில் சர்க்காரை நச்சரித்துவிடுவார்கள்'

'சிறுபான்மையினராக இருந்தாலும் அரசாங்க கவனத்தைத் திருப்பமுடியும்'

'பொதுவாக தென்பகுதிக்கும் குறிப்பாக தமிழகத்திற்கும் நியாயம் கிடைக்க உழைப்பேன்'

'நான் ஜனநாயகப் பார்லிமெண்டு முறையில் நம்பிக்கைகொண்டவன்'

பாராட்டுக் கூட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத் தந்த விளக்கம்

"நாமக்கல் பார்லிமெண்டுத் தொகுதி ஒரு விசித்திரமான தொகுதியாகும்; தொகுதிக்குத் தேவையான இரயில்வே இதர வசதிகளை தொகுதி மக்களின் நன்மைக்காகச் செய்வேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பொதுவாகத் தென் பகுதிக்கும், குறிப்பாகத் தமிழகத்திற்கும் நியாயம் கிடைக்க உழைப்பேன்"

—என்று, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் ஈரோட்டில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் நன்றி தெரிவித்துப் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

16—3—57-ல் ஈரோட்டில், டில்லி மக்கள் சபை நாமக்கல் தொகுதி பிரதிநிதியாகத் தோழர் சம்பத் அவர்கள் வெற்றி பெற்றதைப் பாராட்டி, மாபெரும் ஊர்வலமும், சிறப்பான பாராட்டுக் கூட்டமும் தோழர் எம். கருப்பண்ணன் தலைமையில் நடைபெற்றது.

சென்னைத் தோழர் சீனிவாசமூர்த்தியும், ஈரோடு சோஷலிஸ்டுக் கட்சியின் பிரமுகர் தோழர் எம். சின்னசாமியும், மற்றும் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தோழர் சம்பத் அவர்களுக்கு பல பெரியோர்கள் மாலை அணிவித்து பாராட்டு தெரிவித்தார்கள்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து, 'பாராளுமன்றத்தில் இரண்டொரு தி.மு.க. பிரதிநிதிகளால் ஒன்றும் சாதித்துவிடமுடியாது' என்று குறைகூறுவோரை பற்றி தோழர் சம்பத் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"நான் ஜனநாயகப் பார்லிமெண்டுமுறையில் நம்பிக்கை கொண்டவன். எதிர்க் கட்சியில் எவ்வளவு சிறுபான்மையினராய் இருந்தாலும், பல விஷயங்களை விவாதித்து வற்புறுத்தி, இடித்துக் கூறி சர்க்காரின் கவனத்தைத் திருப்ப முடியும். தி. மு. கழகத்தவரைப் பொறுத்தவரையில் அவர்கள் சர்க்காரை நச்சரித்து விடுவார்கள்.

"தி. மு. கழகம் புராண-மத சம்பந்தமான இழிவுகளை நீக்கும் கொள்கையை அரசியலில் புகுத்துவது கிடையாது. பொதுவாக மக்கள் கழகத்தின் சில கோஷங்களையும் சரியாக அர்த்தம் புரிந்து கொள்ளவில்லை. என்றாலும், இந்த புராண-மத சம்பந்தமான மூடநம்பிக்கைகளையும், சடங்குகளையும் நீக்குவதை எல்லா மக்களும் கட்சிகளும் ஒப்புக்கொள்கின்றன.

"எனக்கு எல்லா வகுப்பினரும் பிராமணர்கள், முஸ்லீம்கள் உட்பட வாக்களித்திருக்கின்றனர்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 21—3—57 வியாழன்

முதல் வெற்றி

சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில் கட்சி உருவில் தன்னை எதிர்க்க எந்த ஒரு கட்சியும் இருக்கவில்லை; போட்டியில்லாமலே பல தொகுதிகளில் காங்கிரசுக் கட்சி வெற்றி பெற்றுவிட்டது என்ற பட்டியலைப் பத்திரிகைகளில் பிரசுரித்து பூரிப்படையலாம் என தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் சர்வாதிகாரியான காமராசர் கனவு கண்டு கொண்டிருந்தார்.

சிற்சில இடங்களில் போட்டியிட முன்வரும் தனி நபர்களை, அவர்களில் பணம் படைத்தவர்களாக இருந்தால் மேல் சபைக்கு நியமிப்பதாகக் கூறியும், மாவட்டக் கழகத் தேர்தலில் நிற்கவைப்பதாக வாக்களித்தும், சாதி செல்வாக்குடைய ஏழையர்களாக இருந்தால் கை நிறையப் பணம் தந்தும், வேறு சலுகைகள் தருவதாக ஆசைவார்த்தைச் சொல்லியும், போட்டியிலிருந்து விலகிக் கொள்ளச் செய்து, காங்கிரசுக் கட்சி பற்பலத் தொகுதிகளில் போட்டியின்றி வெற்றி மாலை சூடிவிட்டது எனக்கூறி மகிழ எண்ணிக்கிடந்தார், தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் ஏதேச்சாதிகாரி காமராசர்.

திரை மறைவில் நடத்திய இழிசெயல்களின் விளைவாகக் கிடைத்த வெற்றியினால் மக்களிடம் உருவாகக்கூடிய மனமயக்கத்தைச் சாதகமாக்கிக் கொண்டு, விரல்விட்டு எண்ணக்கூடிய தொகுதிகளில் மட்டுமே காங்கிரசு அபேட்சகர்களை எதிர்க்க முன்வரும் கொள்கைக் குழப்பக் கட்சிகளை தேர்தல் களத்தில் வென்று, வாகைசூட முடியும் என நம்பிக்கிடந்தார்; அந்த காங்கிரசு சனநாயக எதிர்பான காமராசர்.

இரண்டொரு தொகுதிகளில் அக்கொள்கைக் குழப்பக் கட்சிகள் வெற்றிபெற்றாலும், அதனால் காங்கிரசுக் கட்சிக்கு ஏற்படப்போகிற பலத் தாழ்வு ஒன்றுமில்லை என்றும், அந்தக் காங்கிரசு தேனி குளவான் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

சாதிய பலத்தை மட்டுமே நம்பி அரசியல் சதுரங்கம் ஆடிவரும் இரண்டொருவர் தேர்தல் களத்திற்கு சல்லடம் கட்டி வந்து வெற்றிமாலை சூடினாலும், காங்கிரசுக் கட்சிக்கு அதனால் ஏற்படப்போகிற நஷ்டம் எதுவுமில்லை என்றும், அந்த வடவர் ஏகாதிபத்திய தாசானுதாசர் நம்பிக்கிடந்தார்.

ஆனால், கனவுக் காமராசரின் மனக்கோட்டை, பொடிப் பொடியாய்ப் போயிற்று!

அவர் கனவு பொய்த்தது!

போட்டியின்றி பல தொகுதிகளில் காங்கிரசு வாகை சூடுவது என்றச் செய்தியைப் பத்திரிகைகளில் கண்டு பூரிக்க வேண்டும் என அவர் வைத்திருந்த பேராசையில், பேரிடி விழுந்தது!

அந்தத் தொகுதியில் காங்கிரசை எதிர்ப்பவரை அச்சுறுத்தி வாபசு பெறச்செய்து விடலாம்; இந்தத் தொகுதியில் போட்டியிடுபவரை பதவி ஆசை மூட்டி பின்வாங்கச் செய்துவிடலாம்; வேறு ஒரு தொகுதியில் காங்கிரசு அபேட்சகருக்குத் தோல்வித் தேடித்தர இருப்பவரை பெருந் தொகையைக் காட்டி பேரம் பேசி சரி செய்துவிடலாம்; என்றெல்லாம், இருபதாண்டுக் கால தேர்தல் வித்தையில் பயின்று தேர்ச்சி பெற்றுள்ளவர், கண்டுவந்த கனவு முழுதும், முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கனவாக முடிவுற்றது.

கோரினேன் — கிடைத்தது; ஆசைப்பட்டேன் — காலடியில் வெற்றி சரணாகதி அடைந்தது; எனப் பூரிப்புடன் பேசிப் பேசி மகிழலாம் என்ற அவர் எண்ணம், ஈடேறாமல் தொலைந்தது.

“காங்கிரசு கட்சியைத் தமிழ்நாட்டில் எதிர்க்க ஆள் ஏது— எமது ஆற்றல் அத்தகையது— எமது தலைமையில் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சி உள்ளவரையில், அதை எதிர்க்க எவரும் முன்வரார்” என்று வீரம் பேசி, வடவர் ஏகாதிபத்தியத்திடம் ‘சபாஷ்’ பெறலாம் என நம்பிக்கிடந்தவர் நாட்டத்தை, நாசம் தீண்டிவிட்டது—அதுவும் பெரிய அளவில்!

இவ்வளவிற்கும் மூல காரணமாக இருந்தது நமது முன்னேற்றக் கழகம்.

வெற்றி தோல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காது, தானுக வலிய சனநாயகக் கடமையை ஆற்றுவது என்ற புனிதமான குறிக்கோளுடன் தேர்தலில் ஈடுபட நமது முன்னேற்றக் கழகம் முன்வந்ததின் நேரடி விளைவு இது.

இவ்வகையில், முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் குறிக்கோள் முதல் வெற்றி பெற்றிருக்கிறது—அதிலும் ஈடு எடுப்பற்ற மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது.

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் எதேச்சாதிகாரி, தேர்தலில் என்ன கண்டார்?

எங்கும் எதிர்ப்பைக் கண்டார்!

நாடெங்கும் காங்கிரசு அபேட்சகர்கள் திக்குமுக்காடுவதைக் கண்டார்!

பட்டிதொட்டிகள் எங்கும், காங்கிரசு அபேட்சகருக்கு எதிராக, மக்கள் படைவரிசை திரண்டு முழக்கமிடுவதைக் கண்டார்—செவியுண்டார்!

செவியுண்டது மட்டுமா? மிரண்டார்! பேய்போல் சுற்றி அலைந்தார்!

போகாத வழியெல்லாம் போனார்! தகாத முறைகளை எல்லாம் மேற்கொண்டார்!

அவ்வளவிற்கும் பிறகே, அதிக்கிரம வெற்றியை அவரால் பெற முடிந்தது!

மிகமிகச் சுலபமாகப் பெற திட்டமிட்டிருந்த வெற்றியை, இவ்வளவு அலைச்சலுக்கும் இழிசெயல்களுக்கும் பிறகே பெறக்கூடிய ஒன்றாக மாற்றியுள்ள பெருமை, நமது முன்னேற்றக் கழகம் தேர்தலில் பொறுப்புடன் ஆற்றிய சனநாயகக் கடமையையே முழுதும் சாரும்.

கழகம் மேற்கொண்ட சனநாயகக் கடமைக்கு முதல் வெற்றி கிடைத்திருக்கிறது. இதுகண்டு மகிழ்கிறோம்—கடமையை, கண்ணியத்துடன் நிறைவேற்றித் தந்த கழகத் தோழர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்!

சென்னையிலுள்ள நெசவுக் கழகம்

சேலத்திற்கு மாற்றப்படும்

புதுடில்லி, மார்ச் 19—

சென்னை வண்ணாரப்பேட்டையில் உள்ள நெசவுக் கழகத்தை டில்லி சர்க்கார் மேற்கொள்ளுகிறார்களாம்!

அத்துடன், அந்தக் கழகம் சென்னையிலிருந்து சேலத்திற்கு மாற்றப்படுகிறதாம்!

இந்தத் தகவலை கனரகத் தொழில் மந்திரி எம். எம். ஷா மக்கள்சபையில் கூறியிருக்கிறார்.

டில்லி சர்க்காரே கழகத்தை மேற்கொண்டு அதனை சேலத்திற்கு மாற்றுவது என்று முடிவாகியிருந்தாலும் இன்னும் ஏற்பாடுகள் முடிவடையவில்லை என்றும், இதற்கு செலவு ரூ. 2 இலட்சத்திற்கு அதிகமாக ஆகாது என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

மதுப் பழக்கத்தைக் கைவிடுவார்!

பாங்காக், மார்ச் 18—

தாய்லந்து நாட்டின் தூதுவராக இந்தியாவிற்கு நியமனம் பெற்றுள்ள நய்பன் சரோயென் சாய் என்பார் தனக்குத் தரப்பட்ட வழியனுப்பு உபசாரத்தின் போது, தான் இந்தியாவின் மதுவிலக்குக் கொள்கைக்கு மதிப்பளிக்கும் வகையில், மதுக்குடியை விட்டுவிடப் போவதாகத் தெரிவித்துள்ளார் என்று தெரியவருகிறது.

தடை நீங்கிற்று!

இஸ்மேலியா, மார்ச் 20—

எதிர்பார்த்ததற்கு முன்னதாகவே அதாவது மார்ச் 25-ந்தேதி வாக்கில் சூயஸ் கால்வாய் வழியே எல்லாக் கப்பல்களும் போகக் கூடுமாம்.

‘எட்சார்பான்னெட்’ என்னும் கப்பலை அப்புறப்படுத்துவதன் மூலம் இது சாத்தியமாகிறதென்றும், கால்வாய் வழியே செய்வதற்கு இது ஒன்றுதான் தடையாக இருந்து வந்ததென்றும் கூறப்பட்டிருக்கிறது.

‘அணு ஆயுதப் பரிசோதனைகளை நிறுத்தமாட்டோம்’

ஜப்பான் கோரிக்கைக்கு குருஷ்சேவ் பதில்

முன்மாதிரியாக நடந்துகொள்வதற்குத் தயாராக இல்லையாம்!

மாஸ்கோ, மார்ச் 19—

“நாங்கள் அணு ஆயுதப் பரிசோதனையைக் கைவிடுவதற்கில்லை” என்று ரஷ்யக் கம்யூனிஸ்டு செயலாளர் குருஷ்சேவ் கூறியிருக்கிறார்.

“அணு ஆயுதங்களை வைத்திருக்கும் இதர நாடுகளுடன் இது குறித்து ஒரு உடன்பாடு கண்டாலன்றி, நாங்கள் மட்டும் பரிசோதனைகளை நடத்துவதை நிறுத்துவதற்கில்லை” என்றும் அவர் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்.

ஆசிய ஒற்றுமைக்கான ஜப்பான் கமிட்டி ஒன்றின் தலைவர் ரஷ்யத் தலைவர்களை அணுகி, ‘அணு ஆயுதப் பரிசோதனைகளை நிறுத்த வேண்டும்’ எனக் கேட்டபோதுதான் அவர் அப்படி பதில் கூறினாராம்.

“ஒரு வருடத்திற்கு சோதனைகளை நிறுத்தி வையுங்கள்; பின், இந்த முன் உதாரணத்தைப் பின்பற்றி அமெரிக்காவும் பிரிட்டனும் நடந்துகொள்ளாவிட்டால், நீங்கள் மீண்டும் சோதனைகளைத் தொடங்கிக் கொள்ளுங்கள்” என்று ஜப்பான் குழுத் தலைவர் ஹதார்க்கா கேட்டிருக்கிறார்.

இந்தக் கோரிக்கையையும் ஏற்க, குருஷ்சேவ் மறுத்துவிட்டாராம்!

“இதுபோன்று ஓராண்டிற்குச் சோதனையை நிறுத்துவது ரஷ்யாவின் அணு ஆயுத ஆராய்ச்சியின் முன்னேற்றத்தைத் தாமதப்படுத்தும்” என்றும் குருஷ்சேவ் கூறியிருக்கிறார்.

கம்யூனிச சமுதாயம் எப்போது உருவாகும்?

‘இப்போது இல்லை’ என்கிறார் குருஷ்சேவ்

ஆசிய ஒற்றுமைக்கான ஜப்பான் கமிட்டித் தலைவர் மஷாரு ஹதார்க்கா என்பார், ‘எப்போது கம்யூனிச சமுதாயம் உருவாகும்?’ என்று கேட்டபோது, ரஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சி முதல் செயலாளர் குருஷ்சேவ், ‘எப்போதுதான் அமையும்; இன்னும் எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகு உருவாகும் என்பதை என்னால் இப்போது திட்டமாகக் கூற முடியாது’, என்று பதில் தந்திருக்கிறார்.

மேலும் அவர் கூறியதாவது:—

“ரஷ்யா முதலில் தனது உற்பத்திச் சக்தியை அதிகரித்தாக வேண்டும்; மேலும், அடிமட்டத்திலிருப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை நல்ல வளர்ச்சி பெற்றவர்களின் தரத்திற்கு உயர்த்தி சம நிலையை உருவாக்கியாக வேண்டும்.

“அடுத்தாற்போல, உடலால் உழைப்போருக்கும் அறிவாற்றலால் உழைப்போருக்குமிடையே உள்ள உறவுகள் பற்றிய பிரச்சினையைத் தீர்த்தாக வேண்டும்; இது ஓரளவுக்கு ஏற்கனவே ரஷ்யாவில் தீர்க்கப்பட்டிருக்கிறது,” என்றும் குருஷ்சேவ் கூறினாராம்.

கருணாமூர்த்திகள் சம்மதித்துவிட்டார்களாம்

மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

டில்லி வழங்கும் நிதி உதவி பற்றி தகவல்

மாநில சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களை உயர்த்துவதற்கு, டில்லி சர்க்கார் சம்மதித்துவிட்டார்களாம்.

இந்தக் கருணாமூர்த்திகள், இதற்காக ரூ. 5 கோடி வரும் நிதி ஆண்டில் தரப்போகிறார்களாம்.

மக்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 1957—58-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டங்களை விளக்கிக் கூறும் ‘வெள்ளை அறிக்கை’யில் பின்வரும் தகவல் தரப்பட்டிருக்கிறது:—

மாநிலங்கள் தங்கள் குறைந்த சம்பள விகித ஊழியர்களின் ஊதியத்தை அதிகப்படுத்துவதற்காக உதவி மானியமாக ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய ஊழியர்களுக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கப்பட வேண்டியதுதான் என்பதை இந்திய சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

அவ்வாறு அளிக்கும் நிவாரணத்தின் மூலம் ஏற்படுகிற அதிகப்படியான செலவில் ஒரு பகுதியை இரண்டாவது திட்ட காலத்தில் மீதியுள்ள நான்கு வருடத்தில் இந்திய சர்க்கார் கொடுத்துவர வேண்டுமென்பதையும் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; ஆனால், இது, நிதிக் குழுவின் சிபாரிசுகளுக்கு உட்பட்டு புனர்பரிசீலனை செய்யப்படுவதற்குரியதாகும்.

சுருக்கமாகச் சொல்வதாயிருந்தால் மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களுக்கு, அவர்கள் தங்கள் ஊழியர்களில் குறைந்த சம்பளம் வாங்குகிறவர்களுக்கு ரூ. 12 ஊதிய அதிகரிப்புச் செய்வதற்கு உதவி செய்வார்கள். இந்த 12 ரூபாயையும் சேர்த்தால் ரூ. 100-க்கு மேற்படாமல் சம்பளம் வாங்குகிறவர்கள் விஷயத்தில் இந்த ரூ. 12 அதிகரிப்புச் செய்வதற்கு அவர்கள் உதவி செய்வார்கள்.

மத்திய சர்க்காரின் உதவியானது ரூ. 60 வரையில் சம்பளம் அதிகரிப்புச் செய்யப்படுவதற்கான அதிகப்படி செலவில் மூன்றில் இரண்டு பாகமாகவும், மேற்பட்ட அதிகரிப்புக் காரணமாய் ஏற்படுகிற அதிகப்படி செலவில் மூன்றிலொருபாகமாக இருக்கும்.

இரயில் பாதைகள் பலப்படுத்தப்படும்

புதுடில்லி, மார்ச் 19—

டேனிஷ்பேட்டையில் இருந்து பொம்மிடவரை உள்ள இரயில் பாதை இரட்டிக்கப்படும். இதற்கு ரூ. 162 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 5 இலட்சம் இதற்கு செலவிடப்படும்.

1957—58-ல் 54 இலட்சம் ரூபாய் செலவில் பூடியிலிருந்து புத்தூர்வரை உள்ள பாதையை இரட்டிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் அரக்கோணம்—ரேணிகுண்டா பிரிவு, ஜோலார்ப்பேட்டை-ஈரோடு பிரிவில் உள்ள பாதைகளைப் பலப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 55 இலட்சம் ரூபாய் செலவில் மாவேலிப்பாளையம் பாதையின் தரத்தை மாற்றிச் செப்பனிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜோலார்ப்பேட்டைக்குப் புதிய ‘கூட்ஸ் ஷெட்’

புதுடில்லி, மார்ச் 19—

28 இலட்சம் ரூபாய் செலவில் ஜோலார்ப்பேட்டை இரயில் நிலையத்தில் ‘கூட்ஸ்’ வண்டிகள் நிற்கப் புதிய இடம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 7 இலட்சம் ரூபாய் இதற்குச் செலவிடப்படுமாம்.

போத்தனூரில் பட்டறை

புதுடில்லி, மார்ச் 19—

26 இலட்சம் ரூபாய் செலவில் போத்தனூரில் மத்திய சிக்னல், தந்தி போக்குவரத்துச் சாமான் பட்டறை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூபாய் 15 இலட்சம் செலவிடப்படும்.

ரூ. 365 கோடி துண்டு விழும் மத்திய சர்க்கார் வரவுசெலவுத் திட்டம்

புது வரி விதிப்புகள் மே திங்களில் அறிவிக்கப்படுமாம்

ராணுவத்திற்கு 250 கோடி செலவிட உத்தேசம்

திட்டம் பற்றி ஒரு கண்ணோட்டம்

புதுடில்லி, மார்ச் 19—இந்திய சர்க்காரின் 1957—1958-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் மூலதனச் செலவுகள் உட்பட மொத்தம் ரூ. 365 கோடி துண்டுவிழுகிறது; இது, தினம் ஒன்றுக்கு சராசரி ஒரு கோடி ரூபாய் விதம் கணக்காகிறது. இந்த ரூ. 365 கோடியில் ரெவினியூ கணக்கில் மட்டும் துண்டுவிழும் தொகை ரூ. 26,87,00,000 ஆக இருந்தபோதிலும், இந்தத் தடவை புது வரி ஏதும் விதிக்கப்படவில்லை; ஆனால், அடுத்த மே மாதத்தில் புதிய பாராளுமன்றம் (மக்கள் சபை) கூடி, வரிப் பிரச்சினைகளைக் கவனிக்குமென்றும், அப்போது வரிப் பளு மேலும் அதிகரிக்கப்படுமென்றும், நிதி மந்திரி சூசகமாக அறிவித்தார்.

நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் வெளிநாட்டுச் செலாவணியிலுள்ள பாதகக் கையிருப்பு நிலையைக் குறிப்பிட்டுப் பேசியதாவது:—

1956 எப்ரல் முதல் இதுவரையில் ரூ. 260 கோடி வெளிநாட்டுச் செலாவணியை இந்தியா செலவழித்திருக்கிறது. இப்போது அபிவிருத்தித் திட்டங்களுக்கு உலக பாங்கியிலிருந்து கடன் வாங்குவது பற்றியும் பேச்சு வார்த்தை நடந்துவருகிறது; என்றாலும், இந்தியாவின் அந்நியச் செலாவணி நிலை அதிகரிப்பதற்கு ஏற்றுமதிகள் அதிகரித்து இறக்குமதிகள் கணிசமாகக் குறையவேண்டும். ஓரளவுக்குத் தியாகம் புரியாமல் இவை சாத்தியமாகாது.

வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகள்

இப்போதைய வரித் திட்டத்தின்படி 1957 - 58ல் சர்க்காரின் மொத்த வருமானம் ரூ. 636,22,00,000 ஆகும்; செலவு ரூ. 663,09,00,000 ஆகும்; எனவே, ரெவினியூ கணக்கில் ரூ. 26,87,00,000 துண்டு விழுகிறது.

செலவினத்தில் பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 252,71,00,000; சென்ற வருடத்தைவிட இது சுமார் ரூ. 49,76,00,000 அதிகம்; இராணுவத்திற்கும் விமானப் படைக்கும் சில அத்தியாவசியத் தளவாடங்கள் வாங்கவேண்டியிருப்பதால்தான் இந்த அதிகப்படி செலவாகும்.

மூலதனச் செலவுகளுக்கு, புது வருஷத்தில் நூறு கோடி ரூபாய் பொதுஜனக் கடனும், 135 கோடி ரூபாய் வெளிநாட்டுக் கடன் உதவியும், 80 கோடி ரூபாய் சிறு சேமிப்புத் தொகையும் கிடைக்குமென்று திரு. கிருஷ்ணமாச்சாரியார் கூறினார். இவை யாவும் வரவு செலவுக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

மூலதனச் செலவு (1957-58) ரூ. 455 கோடியாம்

அடுத்த வருடத்திற்கு மூலதனச் செலவு ரூ. 454,77,00,000 என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; இந்தத் தொகை அமெரிக்க சர்க்கார் தருகிற கடன் உதவியான ரூ. 80 கோடி நீங்கலாக இருக்கிறது.

நடைமுதல் ஆண்டைவிட ரூ. 141,09,00,000 அதிகமாக இருப்பதற்குக் காரணம் ரூர்கேலா, பிலாய், துர்க்காபூர் உருக்குத் தொழிற்சாலைக்கு ரூ. 156,83,00,000 ஒதுக்கப்பட்டிருப்பதுதான்.

அடுத்த வருடத்தில் கடன்களுக்காக ஒதுக்கப்படுகிற தொகை ரூ. 317,44,00,000 ஆகும்; அதில் மாநில சர்க்கார்களுக்கான தொகை ரூ. 253,08,00,000; நடைமுதல் வருடத் தொகையைவிட இது ரூ. 12,29,00,000 அதிகம்.

ரூ. 100 கோடி புதிய கடன் எழுப்பப்படுமாம்

அடுத்த வருடத்தில் ரூ. 100 கோடிக்கு புதியதொரு கடன் எழுப்ப உத்தேசிக்கப்படுகிறது. சிறு சேமிப்புகளின் மூலம் ரூ. 80 கோடியும், வெளி உதவியின் மூலம் ரூ. 135 கோடியும் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற சில்லறை இனங்களை கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகும் ரூ. 365 கோடி துண்டு விழுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மலபாருக்கு மின்சார வசதி

கேரள சர்க்காரின் திட்டம்

திருவனந்தபுரம், மார்ச் 19—புதிதாகக் கேரள மாநிலத்துடன் இணைந்த மலபார் மாவட்டத்திற்கு மின்சார வசதி செய்து தருவதற்காகக் கேரள சர்க்கார், ரூ. 217 இலட்சம் செலவிடுவதெனத் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

இந்தத் திட்டம், திட்டக் குழுவின் அங்கீகாரத்திற்காக டில்லி சென்றுள்ளதாம்.

மண்பாண்டத் தொழில் வளர்ச்சி நிலையம்

சென்னையில் அமைபுமாம்

சென்னை, மார்ச் 19—மானியமாக ரூ. 9,000 கடனாக மத்திய அரசாங்கம் அளித்த ரூ. 9,000 ஆகிய தொகையைக் கொண்டு சென்னை அரசாங்கம் இரண்டு மண்பாண்டத் தொழில் நிலையங்களை அமைக்க முடிவு செய்துள்ளதாம்.

கிராம மண்பாண்டத் தொழில் வளர்ச்சியில் 1956—57-ம் ஆண்டுக்கான விரிவான திட்டத்தின் ஒரு பகுதியே இது.

காமன்வெல்த் உறவு நீடிக்கவேண்டுமா?

தேவைப்படும்போது டில்லி சிந்திக்குமாம்

புதுடில்லி, மார்ச் 19—"இந்தியா தொடர்ந்து காமன் வெல்த்தில் அங்கம் வகிப்பது பற்றி சர்க்கார், தேவைப்படும் போது பரிசீலனை செய்யவேண்டியிருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை"

என்று பண்டித பந்த், மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

'காமன்வெல்த்திலிருந்து வெளியேற வேண்டும்,' என்று ஒரு உறுப்பினர், மக்கள் சபையில், அந்நியர் சட்டத் திருத்த மசோதா விவாதத்தின்போது கோரியதற்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு பண்டித பந்த் கூறியிருக்கிறார்.

"காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேறுவது என்பது ஒரு பெரிய பிரச்சினை; அது இதுபோன்ற ஒரு மசோதா விவாதத்தின்போது முடிவு செய்யக்கூடாத ஒன்று" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

கனரக, குடிசைத் தொழில்கள்

கொள்கையில் முரண்பாடில்லை என்கிறார் நேரு

புதுடில்லி, மார்ச் 18—"இந்தியாவில் இன்றைய நிலையில், கனரகத் தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்குமாக சர்க்கார் கடைப்பிடித்து வரும் கொள்கைகளில் எந்தவித முரண்பாடும் இல்லை" என்று பண்டித நேரு, புதுடில்லி கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினாராம்.

எல்லாவகையான தொழில்களும் இந்தியாவில் வளர்வதற்குரிய வாய்ப்புகள் இப்போது இருப்பதாகவும், ஒன்றோடொன்று இதாவற்றுடன் மோதிக்கொள்ளாமல் ஒழுங்குபடுத்திக் கொள்வதின்மூலம் நாம் பல ரகத் தொழில்களையும் வளர்க்கமுடியும் என்றும் அவர் கூறினாராம்!

69 லட்சம் பேர்!

டிக்கெட் இன்றி இரயில்வேயில் பிரயாணம் செய்தார்களாம்!

புதுடில்லி, மார்ச் 19—"1955—56-ம் ஆண்டில் 69 இலட்சம் பேர் டிக்கெட் இல்லாமல் இந்திய இரயில்வேக்களில் பிரயாணம் செய்துள்ளனர்,"

என்று, மக்கள் சபையில் இரயில்வே அமைச்சர் தகவல் தந்துள்ளார்.

புதிய இரயில் பாதைகள் அமைப்புக்கு ரூ. 26 கோடி

புதுடில்லி, மார்ச் 19—1957-58-ல் புதிய இரயில் பாதைகள் அமைப்பதற்காக மொத்தம் ரூ. 26 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

தென் பகுதி இரயில்வேயில் கொல்லம்—எர்ணாகுளம் பிரிவுக்காக இத்தொகையிலிருந்து ரூ. 90 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1957-ம் ஆண்டிற்குள் இப்புதிய பாதை அமைப்பு முடிந்துவிடுமாம்.

இரயில் பிரயாணக் கட்டணங்கள் மேலும் உயருமா?

நிகர இலாபம் 22 கோடியாக உயர்வு

புதுடில்லி, மார்ச் 19—இரயில்வே அமைச்சர் ஜெகசீவன்ராம், மக்கள் சபையில் சமர்ப்பித்த 1957 - 58ம் ஆண்டுக்கான இரயில்வே வரவு-செலவுத் திட்ட சம்பந்தமான வெள்ளை அறிக்கையில், இரயில்வே பிரயாண சாமான் கட்டணங்களில் இப்போது மாறுதல் எதும் இருக்காது என்றும், ஆனால் சாமான் கட்டணங்களில் பின்னர் மாறுதல் ஏற்படுத்தப்படலாமென்றும் குறிப்பிட்டார்.

இந்தச் சாமான்கள் கட்டண விகிதங்களில், மாறுதல், மே மாதவாக்கில் புதிய பார்லிமெண்ட் முன் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினர்.

இரயில்வேயில் உள்ள நான்காவது வகுப்பு சிப்பந்திகளின் வேலை நிலைமைகளை எவ்வாறு அபிவிருத்தி செய்வது என்பதுபற்றி தாம் தீவிரமாக சிந்தித்து வருவதாகவும் தற்போதுள்ள விதிகள் சில நான்காம் வகுப்பு சிப்பந்திகள், மேல் பிரிவுகளை அடைவதற்குத் தடையாக இருப்பதாகவும், இந்த சிக்கல்கள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இரயில் பாலங்களைப் பராமரிப்பது பற்றியும், அவற்றின் பாதுகாப்புக்காகவுமான வழி வகைகளை ஆராய்ந்து கூறும் பொருட்டு ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் அறிவித்தார்.

இந்த வெள்ளை அறிக்கையின்படி 1957-58-ம் வருடத்திய மொத்த போக்குவரத்து வரவுத் தொகை 368·50 கோடி ரூபாய் 1956-57-ம் வருடத்திய திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி அது 350·00 கோடி ரூபாயாக இருந்தது. எனவே இப்போதைய அதிகரிப்பு 18.50 கோடி ரூபாய்.

1957-58-ல் பிரயாணிகள் போக்குவரத்து மூலம் கிடைத்த வருமானம் 119 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நடைமுதல் வருடத்தில் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி அது 115.5 கோடி ரூபாய். இதர வண்டிப் பிரயாணம் மூலம் 24 கோடி ரூபாய் கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை நடைமுதல் வருடத்தில் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி 21·4 கோடி ரூபாயாக இருந்தது. பட்ஜெட்டில் கண்டுள்ள 24 கோடி ரூபாயில் 2·2 கோடி ரூபாய் 1956 எப்ரல் 1-ந்தேதி முதல் அமுலுக்கு வந்துள்ள திருத்தப்பட்ட கட்டண விகிதத்தில் தபால்களை ஏற்றிச் செல்வதால் கிடைக்கும் அ[illegible]சப்படி வருமானமாகும். இவ்[illegible]யில் நடைமுதல் வருடத்திற்காக சரிகட்டப்படவேண்டிய தொகையையும் 1957-58 வருஷக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இரயில்வேக்களில் புதிய தசாம்ச நாணயம் அமுல்

மக்கள் கவனத்திற்கு ஒரு குறிப்பு

1957 எப்ரல் 1-ந் தேதியிலிருந்து புதிய தசாம்ச நாணய முறைக்கு மாறுவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றி இரயில்வேக்களுக்கு விரிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளனவாம்!

"டிக்கெட் கட்டணங்கள், சரக்குக் கட்டணங்கள், பார்சல் கட்டணங்கள் முதலியவைகளின் அடிப்படையில் எந்தவித மாறுதலும் செய்யப்படவில்லை; தற்போதைக்குத் தொகைகள் ரூபாய், அணா, பைசாக்களிலேயே குறிப்பிடப்படும்; எனினும், ஒருவர் இரயில்வேக்களுக்குச் செலுத்தவேண்டிய தொகையை பழைய நாணயங்களில் செலுத்துவதா அல்லது புதிய நாணயங்களில் செலுத்துவதா அல்லது இரண்டு நாணயங்களையும் கலந்து செலுத்துவதா என்பது, பணம் செலுத்துபவரின் விருப்பத்தையே முற்றிலும் பொறுத்ததாகும். இதுபோலவே, இரயில்வே சிப்பந்திகளால் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய எந்த மீதித் தொகைகளும், சவுகரியம்போல் இவ்விரண்டு நாணயங்களில் ஏதாவது ஒன்றிலோ அல்லது இரண்டும் கலந்தோ கொடுக்கப்படலாம்" என்று, பத்திரிகைக் குறிப்பு ஒன்று தரப்பட்டிருக்கிறது.

பிளாட்பாரம் டிக்கெட் ஒன்றின் விலை 1957 எப்ரல் 1-ந் தேதிக்குப் பிறகும் ஒரு அணாவாகவேதான் இருந்துவரும்; தனியாக ஒரே ஒரு பிளாட்பாரம் டிக்கெட் வாங்கப்பட்டால், புதிய நாணயப்படி கொடுக்கப்பட வேண்டியது 6 'நயா பைசா'க்களாகும்; அதாவது, நாணய மாற்று அட்டவணைப்படி அது ஒரு அணாவுக்குச் சமமான தொகை. ஆயினும், ஒருவர் ஒரே சமயத்தில் 16 பிளாட்பாரம் டிக்கெட்டுகள் வாங்கினால் அவர் கொடுக்கவேண்டிய தொகை 16 அணா அல்லது 100 'நயா பைசா'க்களாகும்; 96 'நயா பைசா'க்கள் அல்ல!

கீழ்பவானியில்!

மிதியடித் தோல் பொருள் தொழிற்சாலை நிறுவப்படுமாம்

சென்னை, மார்ச் 19—குடிசைத் தொழில், சிறு தொழில்கள் வளர்ச்சிக்கான திட்டத்தின்கீழ் கீழ்பவானி பகுதியில் செருப்பு, இதர காலணிகள் உற்பத்திச்சாலை ஒன்று அமைக்க சென்னை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதாம்.

இதற்கு முதலீடாக ரூ. 51,000 மும், ஆண்டுதோறும் ரூ. 2,42,410-ம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திட்டத்தின்கீழ் 12 பேர்களுக்கு மாதம் ரூ. 25 ஊதியமளித்து, காலணிகள் தயாரிக்கும் முறைகளில் பயிற்சியளிக்கப்படுமாம்.

பின்னர் இந்தத் தொழிற்சாலை கைத்தொழில் கூட்டுறவு அமைப்பாக மாற்றப்படுமாம்.

விழுப்புரம் வரையில்!

மின்சார இரயில்வே விஸ்தரிப்பு

புதுடில்லி, மார்ச் 19—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இந்தியா முழுமையிலும் மின்சார இரயில்வே விஸ்தரிப்புக்காக ரூ. 80 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தென் பகுதி இரயில்வேயில் தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரையில் மின்சார இரயில் பாதையை விஸ்தரிக்கும் வேலை 1959-ல் முடிவுபெறுமாம்.

1957-58-ல் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை சுமார் 1,40,00,000 என்றும், இதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் பாக்கியிருப்பது 2,06,50,000 என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மயிரிழையைவிட மெல்லிய மின்சாரக் கம்பிகள்!

நுட்ப அளவைக் கருவிகள், சிறிய ரேடியோ பெட்டிகள், மின்சாரக் கணித இயந்திரங்கள், மின்னணுப் பொறிகள் முதலியவற்றிற்குத் தேவைப்படும் அரிய உலோகங்களினால் ஆன மிகவும் மெல்லிய கம்பிச் சுருள்களை, மாஸ்கோவிற்கு அருகிலுள்ள ஒரு புதிய தொழிற்சாலை உற்பத்தி செய்து வருகிறதென்றும், இக்கம்பிகள் மயிரிழையில் மூன்றில் அல்லது நான்கில் ஒரு பங்கு பருமனுள்ளவையென்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

விபத்துக்காளாகிய நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி

தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் தரும் முழுத் தகவல்கள்

சென்னை, மார்ச் 21— நடிப்பிசைப் புலவர் தோழர் கே. ஆர். இராமசாமி, டைரக்டர் காசிலிங்கம், டி. கே. எஸ். சகோதரர்களின் மைத்துனர் சுந்தரம், திரைப்படத் தாரகர் வில்லிவாக்கம் சீனிவாசன் ஆகியோர் சென்ற ஏ. எல். எஸ். புரொடக்ஷன்சாரின் கார், சென்னைக்கு 208-வது மைலில் ஆந்திராவைச் சேர்ந்த ஓங்கோல் அருகில் 18—3—57 இரவு 10 மணி அளவில் விபத்துக்குள்ளாகியது.

அன்று மாலை 5 மணி யளவில் ஐதராபாத்திற்குத் திரைப்படமொன்று சம்பந்தமாகக் கலந்து பேச அவர்கள் சென்றுகொண்டிருந்தபோதே அந்த விபத்து நடைபெற்றது.

விபத்து நடந்த இடத்திலேயே வில்லிவாக்கம் சீனிவாசன் மரணமடைந்தார். நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமிக்கு மார்பில் உள்காயங்களும், மற்றவர்களுக்குச் சிறு காயங்களும் ஏற்பட்டுள்ளன.

காயம்பட்ட அனைவரும் ஓங்கோல் அரசினர் மருத்துவ விடுதியில் இரவு 2 மணிக்குச் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். டிரைவர் மருத்துவவிடுதியில் போலீசாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

நடிப்பிசைப் புலவரும் மற்றவர்களும் 21—3—57 காலை புறப்பட்டு மாலை சென்னை வந்து சேருவர்.

நடிப்பிசைப் புலவர் சென்னை வந்தடைந்ததும், அவர் காயங்கள் 'எக்ஸ்ரே' எடுக்கப்பட்டு சிகிச்சை பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

இத்தகவல்களை ஓங்கோல் சென்று வந்துள்ள தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அண்ணு

மற்றும்

வெற்றி பெற்ரேருக்குப்

பாராட்டு

22-3-57 மாலை 5-மணிக்கு, காஞ்சீபுரத்தையடுத்த பரந்தூர் கிராமத்தில், அரங்கசாமி நினைவு மன்றச் சார்பில், தோழர் கோ. காளியப்பன் அவர்கள் தலைமையில், அண்ணு, மற்றும் வெற்றி பெற்ற தோழர்கள் க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியவர்களைப் பாராட்டு முகத்தான் கூட்டமொன்று நடைபெறும்.

தோழர்கள் சி. வி. எம். அண்ணுமலை, கே. டி. எஸ். மணி, டி. சீனுவாசன், பி. ஜி. அண்ணுமலை ஆகியோர் பேசுவர்.

குறிப்பு :—இரவு 10-மணிக்கு 'ஏழையின் கண்ணீர்' என்ற நாடகம் நடைபெறும்.

மற்ற கட்சிகள் ஒன்றுபட முடியாதது ஏன்?

'கம்யூனிஸ்டுகளின் பிடிவாதமும் ஒத்துழையாமையுமே காரணம்'

சோஷலிஸ்டுக் கட்சியினர் கருத்து

"பொதுத் தேர்தலுக்கு முன் தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கட்சிப் பிரமுகர்களும் ஒன்று கூடி, தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராகத் தனிப்பட்ட முறையில் எதிர்க்கட்சிகள் சார்பில் பல அபேட்சகர்களை நிறுத்தப் போட்டியிடாமல், எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்து ஒரு அடிப்படைத் திட்டத்தின்கீழ் காங்கிரஸ் கட்சி அபேட்சகர்களுக்கு எதிராக மொத்தத்தில் எதிர்க்கட்சிகளின் சார்பில் அந்தந்த தொகுதியில் எந்தெந்த எதிர்க்கட்சிக்கு அதிகப்படியான செல்வாக்கு இருக்கின்றதோ அதன் அபேட்சகரை மட்டும் நிறுத்துவதென்று திட்டங்கள் வகுக்கப்பட்டது; ஆனல், கம்யூனிஸ்டுகளின் பிடிவாதத் தன்மையாலும், ஒத்துழையாமையாலும் அம்மாதிரி திட்டம் நிறைவேற்றப்படவில்லை"

என்று, நாமக்கல் பாராளுமன்றத் தொகுதியில் தி. மு. கழகத்தின் சார்பில் வெற்றி பெற்ற தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களைப் பாராட்டி ஈரோட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சென்னைத் தோழர் சீனிவாசமூர்த்தி குறிப்பிட்டார்.

அச்சுறுத்தலா, ஆர்ப்பரிப்பா ?

உலக நாடுகளுக்கு ரஷ்யத் தற்காப்பு அமைச்சர் எச்சரிக்கை?

மாஸ்கோ, மார்ச் 20— "அணு ஆயுதங்களுக்குத் தடை விதிக்கப்படாத நிலைமையில் புதியதோர் போர் ஏற்படுமானல், வழக்கமாகப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களுக்குப் பதிலாக அணு ஆயுதங்களே பிரயோகமாகும்; இத்தகைய போரில், எதிரிகள் எவராயினும் அவர்களைத் தலைதூக்காதவாறு தாக்குவதற்கு ரஷ்யாவிடம் போதிய வசதிகள் இருக்கிறது" என்று, ரஷ்யத் தற்காப்பு மந்திரி மார்ஷல் ஜுகாவ் கூறியதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

பாபநாசம் மின்சார விநியோகம்

25 சதவிகிதம் வெட்டப்படுமாம்

மதுரை, மார்ச் 20— பாபநாசம் நீர்த்தேக்கத்தில் நீர் மட்டம் குறைவாக இருப்பதால் வரும், ஏப்ரல் முதல் பாபநாசத்திலிருந்து மின்சாரம் பெறுகிற பிரதேசத்தில் 25 சதவிகித விநியோகம் வெட்டப்படும் என்று கூறப்படுகிறது.

ஏப்ரல், மே திங்களில் மழை பெய்து நீர்மட்டம் உயருமானல் இந்த வெட்டு நிறுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

திருவாரூர் இரயில் நிலையம் திருத்தியமைக்கப்படுமாம்

புதுடில்லி, மார்ச் 19— ரூபாய் 28 இலட்சம் செலவில் திருவாரூரில் உள்ள இரயில் நிலையத்தை மாற்றியமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இதற்காக ரூ. 7 இலட்சம் செலவிடப்படும்.

ஆந்திரப்பிரதேசம் தொழில் மயமாகத் திட்டங்கள்

சட்டசபையில் கவர்னர் உரை

ஐதராபாத், மார்ச் 20— "ஒன்பது சர்க்கரை ஆலைகள், நான்கு சிமெண்டு ஆலைகள் ஆகியவற்றை நிறுவ உத்தேசித்திருக்கிரேம்.

"மாநிலத்தின் தொழில் துறை வளர்ச்சிக்காக மத்திய-மாநில ஆட்சிகள் ஒரு பெரும் திட்டத்தைப் பரிசீலித்து வருகின்றன."

என்று, ஆந்திரப் பிரதேச கவர்னர் திரிவேதி, சட்டசபைக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிருர்.

'ஆந்திர மாநில ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்துவதைப் பற்றியும் சர்க்கார் தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றனர்' என்றும் அவர் கூறியிருக்கிருர்.

சில குறிப்பிட்ட கிராமங்களில் 'விஞ்ஞான மந்திர்' என்றழைக்கப்படும் சிறு கிராம ஆராய்ச்சிக் கூடங்கள் அமைக்கப்படுகின்றன' என்றும், அவற்றில் இரண்டு ஆந்திரத்தில் அமையும் என்றும் கவர்னர் குறிப்பிட்டிருக்கிருர்.

வரும் ஜூலை முதல் கர்னூலில் ஒரு மருத்துவக் கல்லூரி துவங்கும் என்றும் அவர் கூறியிருக்கிருர்.

'குறைந்தபட்ச சம்பளம் 100-ஆக உயர்த்தப்படவேண்டும்'

தஞ்சை ஆசிரியர் மாநாட்டில் கோரிக்கை

தஞ்சாவூர், மார்ச் 18— "ஆசிரியர்களின் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 100 ஆக இருக்க வேண்டும்; அதற்கேற்ப சம்பள விகிதங்கள் திருத்தி அமைக்கப் படவேண்டும்"

என்று, தஞ்சை மாவட்ட ஆசிரியர் சங்க மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

"செகண்டரி பள்ளிகளில் பணியாற்றும் எல்லா கிரேடு ஆசிரியர்களுக்கும் 'பென்ஷன்' வசதி கிடைக்குமாறு கல்வி இலாகா அதிகாரி சிபாரிசு செய்யவேண்டும்"

என்றும், மற்ருெரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், சில சந்தர்ப்பங்களிலேனும் சர்க்கார், ஆசிரியர்கள் 62 வயது வரை பணியாற்ற அனுமதிக்க வேண்டுமெனவும் கோரப்பட்டது.

வெற்றி பெற்ற கழக வீரர்கள்

சட்டசபையில்......

1. அண்ணு
2. அண்ணுமலை (களம்பூர்)
3. அன்பழகன் க.
4. ஆசைத்தம்பி ஏ. வி. பி.
5. ஆனந்தன்
6. இருசப்பன்
7. கருணுநிதி மு.
8. கோவிந்தசாமி ஏ.
9. சண்முகம் ப. உ.
10. சத்தியவாணிமுத்து
11. சந்தானம் எஸ்.
12. சாரதி எம். பி.
13. சுப்பிரமணியம் எம். பி.
14. செல்வராஜ் எம்.
15. நடராசன்

* * *

மக்கள் சபையில்......

1. ஈ. வெ. கி. சம்பத்
2. தர்மலிங்கம்

(ஆதரவாளர்கள்)

3. டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி
4. என். சிவராஜ்

மறுவாக்குப் பதிவு நடத்த உத்தரவு

வாக்குப் பதிவுப் பெட்டி வைக்கப்படாததே காரணம்

பம்பாய், மார்ச் 20— மக்கள் சபைக்கான பம்பாய் நகர மத்தியத் தொகுதியில் வாக்குப் பதிவு முடிவடைந்துவிட்டது; வாக்குகளும் எண்ணப்பட்டு வருகின்றன.

ஆனல், அந்தத் தொகுதியைச் சேர்ந்த பைகுல்லா பகுதியிலுள்ள 9-ம் எண் வாக்குப் பதிவு நிலையத்தில். ஒரு சுயேச்சை அபேட்சகரின் வாக்குப் பெட்டியை வாக்குப் பதிவு அறையில் வைக்கப்படவில்லை என்பதை தேர்தல் அதிகாரியிடம் அவர் முறையிட்ட பின்னரே அவருடைய பெட்டியை வைத்தனராம்.

'இந்தத் தவறுதலின் காரணமாக அந்த வாக்குப் பதிவு நிலையத்தில் மட்டும் மீண்டும் 21-ந் தேதி மறுவாக்குப் பதிவு நடைபெற வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்.

மைசூர்-மாநில வரவு-செலவுத் திட்டம்

ரூ. 12 கோடி துண்டு விழுகிறதாம்

மைசூர் மாநில வரவு-செலவுத் திட்டத்தில் 11 கோடியே 97-இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் துண்டு விழுகிறதாம்!

நிதி மந்திரி டி. மாரியப்பா இன்று சபையில் திட்டத்தைத் தாக்கல் செய்திருக்கிருர்.

வரவு சுமார் ரூ. 49 கோடி என்றும், செலவு சுமார் ரூ. 61 கோடி என்றும் தெரியவருகிறது.

இரண்டாம் திட்டத்திற்காக சுமார் ரூ. 9,58,00,000 செலவிடப்படுமாம்.

கல்வி, மருத்துவம், சுகாதாரம், விவசாயம் இவற்றிற்காக சுமார் ரூ. 28 கோடி செலவிட உத்தேசமாம்.

பல மாடிகள் கொண்ட புதியகாரியாலயங்கள்

ரூ. 48 - இலட்சம் செலவில் சென்னையில் கட்டப்படுமாம்

ரூ. 48 இலட்சம் செலவில், சென்னையில் பல மாடிகள் கொண்ட புதிய இரயில்வே காரியாலயங்கள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாக வரவு-செலவுத் திட்டத்துடன் இரயில்வே அமைச்சர் சமர்ப்பித்த விளக்கக் குறிப்பில் காணப்படுகிறது.

இந்தத் தொகையில் ரூ. 1-இலட்சம் ஏற்கனவே செலவாகியுள்ளது; நடைமுறை ஆண்டிற்கு ரூ. 15-இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ளவை ரூ.-32 இலட்சமாகும்.

புதிய காரியாலயங்கள் குளிர்சாதன அமைப்புடையதாக இருக்குமாம்.

இடம் மாறியவர்கள்!

சென்னை, மார்ச் 20— கடந்த 5-ஆண்டு காலமாக சட்டசபை உறுப்பினர்களாயிருந்தவர்களில் 8 பேர் மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 5 பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். மக்கள் சபையில் பதவி வகித்தவர்களில் 5 பேர் இந்த முறை சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்; இவர்களில் 3 பேர் காங்கிரஸ் உறுப்பினர்கள்.

நாட்டு மக்கள் பெற்று வரும் அரசியல்விழிப்பு

வாக்குப்பதிவு செய்தோர் எண்ணிக்கை விவரம்

சென்னை மாநிலத்தில் மொத்த வாக்காளர் எண்ணிக்கையும், தேர்தலில் வாக்குப் பதிவு செய்தோர் எண்ணிக்கையும் தரப்பட்டிருக்கிறது. நாட்டு மக்கள் பெற்றுவரும் அரசியல் விழிப்புணர்ச்சிக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

மொத்த வாக்காளர் : 1,75,51,715

வாக்குப் பதிவு செய்யாதவர் : 90,64,900

வாக்குப் பதிவு செய்தோர் : 84,86,815

மொத்த வாக்காளர்களில், வாக்குப் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 48·3 சதவிகிதம் என்று கணக்கிடப்படுகிறது.

ஆட்சியின் லட்சணம்!

ரூ. 11-இலட்சம் தங்கந்தை கோட்டை விட்டனர்

திப்ருகர், மார்ச் 18— 1944-ம் ஆண்டு ஜூன் 26-ந் தேதியன்று விமானம் மூலம் இந்தியாவுக்கு வந்த சீனக் குடிமகனெருவர் கள்ளக் கடத்தல் மூலம் கொண்டுவந்த ரூ. 11-இலட்சம் பெறுமானமுள்ள தங்கத்தைக் கண்டுபிடித்துக் கைப்பற்றினராம்.

கைப்பற்றப்பட்ட அந்தத் தங்கத்தை ஒரு பெட்டியிலிட்டு 'சீல்' வைத்து சுமிஷனர் மேற்பார்வையில் கஜானு அதிகாரி வசம் ஒப்படைக்கப்பட்டதாம்.

அந்த தங்கத்தை ஏலம் விடுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாம்; ஏலத்திற்கு சுமார் 400-பேர்கள் வந்திருந்தனராம்.

ஏலச்சாவடியில் உதவி கமிஷனர், சீல் வைக்கப்பட்ட பெட்டியைத் திறந்து பார்த்தபோது, பெட்டி காலியாக இருப்பதைக் கண்டு திடுக்கிட்டாராம்!

புலன் விசாரணையில் போலீசார், இப்போது ஈடுபட்டிருக்கின்றனராம்.

ஐ. நா. படையின் பொறுப்பு அதுதானும்!

செய்ரோ, மார்ச் 20— "எகிப்து—இஸ்ரேல் எல்லையோரமாக நிற்கும் ஐ. நா. படைகளின் முக்கிய பணி, இரண்டு பகுதிகளுக்குமிடையே கள்ளத்தனமாக எவரும் நுழைவதைத் தடுத்து கண்காணிப்பதாகும்" என்று படை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை—கோடம்பாக்கம் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

23—3—57 இரவு 9 மணியளவில், கழகப் பணிமனையில், கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்; உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கோரப்படுகின்றனர்,

ஏமன்டிவேலரா பிரதமரானர்

அயர்லாந்தின் புதிய பிரதமராக ஏமன்டிவேலரா தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்.

இவருக்கு 78 வாக்குகள் கிடைத்தன; எதிராக 53 வாக்குகளே பதிவாயின.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.